சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.138/2025

***(CNR.No.TNMD240003602025)***

பரமன் ... வாதி

/ எதிர் /

தர்மராஜ் ... பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 20.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. செல்லப்பா அவர்கள் முன்னிலையாகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவர் தோன்றாதரப்பினராக உத்தரவு செய்யப்பட்டும், வாதி தரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைபட்ச…

**<u>தீர்ப்புரை</u>**

பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டிய பிராதுத் தொகை ரூ.3,80,400/-ஐ செலுத்தவும், வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழக்கு முடியும் தேதிவரை 12 சதவீதம் வட்டியும், அதற்கு பின்னிட்டு

தொகை வசூலாகும் தேதிவரை 6 சதவீதம் வட்டியும் செலுத்தக்கோரியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :</u>**

பிரதிவாதி அவரது குடும்ப செலவிற்காகவும், சில்லறை கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியிடம், கடந்த 26.05.2023ம் தேதியன்று ரூ.3,00,000-த்தை கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக சாட்சிகள் முன்னிலையில் புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கடனுக்கு 12 சதவீதம் பின் வட்டியுடன் சேர்த்து செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். பிறகு வாதி பலமுறை கேட்டும் ஒப்புக்கொண்டபடி கடன் தொகையை செலுத்தாமல் பிரதிவாதி இருந்துள்ளார். பிரதிவாதி தொடர்ந்து காலதாமதம் செய்து ஏமாற்றும் நோக்குடன் செயல்பட்டு வந்ததால் கடன் தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.1 ஆக சாட்சி விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக 26.05.2023ம் தேதியிட்ட வாதிக்கு, பிரதிவாதி எழுதிக் கொடுத்த புரோநோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். ஆனால் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதி இந்த வழக்கின் முழு விபரங்கள் தெரிந்தும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் வாதியின் வழக்கு விபரங்களை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. வாதியிடம் பெற்ற கடனை பிரதிவாதி திருப்பி செலுத்தக் கடமைப்பட்டவர். எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதி, வாதி கோரிய பிராதுத் தொகை ரூ.3,80,400/-ஐ வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.3,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்புத் தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்புத் தேதியிலிருந்து மேற்படி அசல் தொகை ஈடாகும் வரை 6% வட்டியுடனும் வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.29 15:30:18 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி:**

வா.சா.1 பரமன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.05.2023 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டு அசல் |

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.29 15:30:27 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.